புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

எண். 33 /போ.துறை/2014 தேதி :07-11-2014

## செய்திக் குறிப்பு

சபரி மலை சீசன் நவம்பர் மாதம் மத்தியில் தொடங்கி ஜனவரி மூன்றாவது வாரம் முடிவடைகிறது. இந்த காலங்களில், பெரும்பாலான பக்தர்கள் Contract Carriage Vehicles & Goods Carriage Vehicles மற்றும் பழுதடைந்த வாகனங்களில் பயணம் செய்கின்றனர். இவ்வாகனங்கள் பயணிகளைச் சுமந்துகொண்டு செல்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் கேஸ் சிலிண்டர்களையும், அரிசி மூட்டைகளையும், சமையல் சாதனங்களையும் எடுத்துச்செல்கின்றனர் மற்றும் வாகன விதிமுறைகளை மீறி அதிக சுமைகளோடு வாகனங்களை இயக்கி வருகிறார்கள் என்ற தகவலும் தெரியவந்துள்ளது. இவை அனைத்தும் எதிர்பாராத வகையில் விபத்துகளையும், உயிர் சேதத்தையும் விளைவிக்கக்கூடும். மேலே கூறப்பட்ட அனைத்துச் செயல்களும், மோட்டார் வாகனச் சட்டப்படி விதிமீறலாகும்.

ஆகவே, அனைத்து Contract Carriage Vehicles & Goods Carriage Vehicles-ன் உரிமையாளர்கள் இந்த செய்திக்குறிப்பின் மூலம் அறிவுறுத்தப்படுவது யாதெனில், தங்களின் வாகன ஓட்டுநர்களுக்கு தக்க ஓய்வு கொடுத்தும், வாகனங்களில் அதிக சுமைகளை ஏற்றாமலும், பயணிகளைத் தவிர இதர பொருட்களான சமையல் கேஸ் சிலிண்டர்களையோ, அரிசி மூட்டைகளையோ, சமையல் சாதனங்களையோ ஏற்றிச் செல்ல வேண்டாம் என்றும் விதிகளை மீறும் வாகனங்கள் மீது மோட்டார் வாகனச் சட்ட விதிகளின் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுச்சேரி போக்குவரத்துத் துறை தெரிவித்துக்கொள்கிறது.

GOVT OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்